1979 பிப்ரவரி 23]

*–வினா எண். 146—திரு. ஒ. சோ. வேலுச்சாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி மாவட்டத்தில் எத்தனை அரசுப் பள்ளிகளுக்கு உயர் இடை நிலைக் கல்வி வகுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திருநெல்வேலி மாவட்டத்தில் 25 அரசு உயர் நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் 25,000 ரூபாய் பொது மக்களிடம் இருந்து வசூல் செய்து கட்ட வேண்டும் என்றும் அப்படி அவர்கள் கட்டவில்லை என்றால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாவட்ட கல்வி அதிகாரி அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த ஆணை கல்வி இயக்குநருடைய அலுவலகத்தில் இருந்து பிறப்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. ஆகவே இது பற்றி அரசு என்ன கொள்கையை மேற்கொள்ளவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மேல் நிலைப் பள்ளிகளுக்கு ரூபாய் 25,000 கட்ட வேண்டும் என்பது வழக்கமாக புதிய பள்ளிகள் ஆரம்பிப்பதற்கான வழக்கத்தையொட்டி எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மேல் நிலைப் பள்ளிகளுக்கு கட்டாயப் படுத்தவில்லை என்பதோடு , அந்தத் தொகையை கட்ட வேண்டும் என்று சொல்வதற்கு காரணமே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்பையும், தலைமை ஆசிரியர்கள் பெற வேண்டும் என்றும் அது மட்டுமல்லாது பொது மக்கள் மூலமாகவும் பெற்றோர்கள் சங்கத்தின் மூலமாகவும் இந்தத் தொகையை வசூல் செய்வதுதான் மேல் நிலைப் பள்ளிகள் தொடர்ந்து நல்ல முறையில் இயங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

திரு. ந. தனசேகரன் : நெல்லை மாவட்டத்திலே மேல் நிலைப் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்று அரசிடம் வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை? இதில் அரசு அனுமதித்த விண்ணப்பங்கள் எத்தனை ? எந்த அடிப்படையில் அவைகள் திறக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, மாணவர்களுடைய தேவைகளின் அடிப்படையிலும் அது அமைந்து இருக்கிற இடங்களுடைய அமைப்புகளை வைத்தும்

நாம் மேல் நிலைப் பள்ளிகளை துவக்கியிருக்கிறோம். ஏறக் குறைய அனுமதி கேட்டு வந்ததில் பெரும்பான்மையான வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடந்து வருகின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இதே மன்றத்தில் ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு மேல் நிலைப் பள்ளி திறக்கப்படும் என்று அமைச்சர் கூறியிருக்கிறார்கள். வாசுதேவ நல்லூரில் ஆறு கீழ் நிலைப் பள்ளிகள் இருந்தும் ஒரு மேல் நிலைப் பள்ளி கூட இல்லை. இங்கிருந்து வடக்கே ராஜபாளையம் 12 மைலில் ஒரு மேல் நிலைப் பள்ளியும், தெற்கே புளியாங்குடி 12 மைலில் ஒரு மேல் நிலைப் பள்ளியும் இருக்கின்றன. இதனால் மக்கள் தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். இங்கே வாசுதேவ நல்லூரில் ஒரு மேல் நிலைப் பள்ளி தொடங்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நாங்கள் புதிதாக மேல் நிலைப் பள்ளிகள் திறக்கவிருக்கின்றோம். இன்னும் முடிவு பெறவில்லை. அந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

ஜின்னிங் ஆலைகளில் பணியாற்றும் பெண் தொழி லாளர்களது ஊதியங்கள்.

*வினா எண். 147— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

ஜின்னிங் பேக்டரிகளில் வேலை செய்யும் பெண் தொழி லாளர்களின் கூலியை உயர்த்தச் செய்வது குறித்த செயற் குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பஞ்சு அரைவு, பஞ்சு அமுத்துதல், கழிவுப்பஞ்சு ஆகிய வேலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு (பெண்கள் உட்பட) குறைந்த அளவு ஊதிய வீதங்கள் ஏற்கனவே 1969 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வீதங்களை மாற்றி யமைக்க அரசுக்கு ஆலோசனை கூற ஒரு குழு அமைக்கப்பட் டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்றபின் குறைந்த அளவு ஊதிய வீதங்களை மாற்றி அமைக்க வாய்ப்பு இருக்கிறது.